LIBRARY
20 JUL 1965

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 23rd March 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

சட்டங்களை மொழி பெயர்த்தல்

* 303. கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்காக தனியாக ஏதேனும் குழு ஒன்றை அரசாங்கம் அமைத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தக்குழு இதுவரை எந்தெந்த சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கான சட்ட வார்த்தைகளில் "A" யிலிருந்து "N" வரை தொகுக்கப்பட்டுள்ள முதல் தொகுதி முடிவடையும் தருவாயிலிருக்கிறது. சட்டச் சொல்லகராதியின் வேலை முடிந்தவுடன் சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கான வேலை துவங்கப்படும்.

(*a*) Yes.

(*b*) The first consolidated volume of the Glossary of Legal terms in Tamil from A to N is likely to be completed shortly. The work of translating the Acts has to be taken up only after the completion of the Glossary.

திரு. செ. மாதவன் : இந்தச் சட்ட சொல் அகராதி தொகுப்பிலே மத்திய சர்க்கார் ஏதாவது பங்கு ஏற்றிருக்கிறதா ? மத்திய சர்க்கார் குழு ஒன்று நம்முடைய சர்க்காரிடத்திலே ஆலோசனை கேட்க வந்ததா ? அப்படியிருந்தால் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய சர்க்காரும் இதிலே ஈடு பட்டிருக்கிறார்கள். அவர்களுடன் இந்த அரசாங்கம் விவாதிப்பதுண்டு. மேலும் விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : தனிப்பட்டவர்கள் யாரேனும் சட்டங்களை மொழி பெயர்த்திருக்கிறார்களா ? அப்படி மொழி பெயர்க்கப்பட்ட நூல்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அந்த நூல்கள் உண்மையிலேயே நல்ல நூல்கள் என்று அரசாங்கத்திற்குத் தோன்றுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

திரு. முனு ஆதி : சென்னை உயர் நீதி மன்றத்திலே தமிழிலே வழக்காடுவதற்கும், தமிழிலே வழக்குகளை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இந்தப் பிரச்சினை எழவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் யார் யார் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : அகில இந்தியாவிலும் ஒரே மாதிரியான சட்ட சொற்கள் இருக்கவேண்டுமென்ற கருத்தை இந்தக் குழுவினர் வற்புறுத்தி இந்தி சொற்களுக்கும் தமிழிலே சட்ட சொற்களைக் கையாளவேண்டுமென்று இந்த அரசாங்கத்தை வற்புறுத்தியதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

Evening Colleges

* 304 *Q.*—SRI M. KALYANASUNDARAM : } Will the Hon.
SRI V. SANKARAN : }
the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal for the opening of Evening Colleges ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It is proposed to start three Evening Colleges in 1965–66 in the following Government Colleges :—

(i) Government Arts College, Madras—Evening College for Men.

(ii) Queen Mary's College, Madras—Evening College for Women.

(iii) Government Arts College, Coimbatore—Evening College for Men.

திரு. வை. சங்கரன் : வேலையிலிருந்துக்கொண்டே படித்து பட்டம் வாங்கவேண்டுமென்று விரும்புகிற மக்கள் அனைவருக்கும் சென்னையில் மட்டும் அல்லாமல் ராஜ்யத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் மாலைநேரக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆண்டிலே மூன்று மாலை நேரக் கல்லூரி ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்த அனுபவத்தைப் பார்த்து மாவட்டங்களில் விஸ்தரிப்பதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. செ. மாதவன் : இந்த மாலை நேரக் கல்லூரிகளுக்கு எந்த ஆசிரியர்களைப் பயன் படுத்துவாாகள். இருக்கின்ற ஆசிரியர்களையே பயன் படுத்துவார்களா அல்லது புதிதாக ஆசிரியர்களை அமர்த்துவார்களா ?